தமிழக அரசின் சார்பில் ''உலமா'' பென்ஷனை உயர்த்தும் திட்டம்.

*10324—திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழக அரசின் சார்பில் '' உலமா '' பென்ஷனை ரூ. 500 ஆக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ''உலமா'' பென்ஷன் பெறுபவர்கள் பற்றிய விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) உலமா பென்ஷனை ரு. 500 ஆக உயர்த்தும் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) இத்திட்டத்தின் கீழ் தற்போது 1,200 நபர்கள் பயன் பெறுகின்றனர்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' உலமா '' பென்ஷன் கேட்டு தமிழக அரசுக்கு இதுவரை எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன என்பதையும், இவர்களில் தகுதி உள்ள அனைவருக்கும் பென்ஷன் வழங்கிட உத்தரவு செய்யப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

9—20 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இதுவரையில் எத்தனை மனுக்கள் வந்துள்ளன என்பது பற்றி திட்டவட்டமாகச் சொல்ல முடியாவிட்டாலும், ஆயிரக்கணக்கான மனுக்கள் வந்திருப்பதாகத் தகவல் கிடைத்து இருக்கிறது. தொடக்கத்தில், இத்திட்டத்தால் பயன் பெற்றவர்களுடைய எண்ணிக்கை 400 ஆக இருந்தது. தற்போது 1,200 ஆக உயர்ந்து இருக்கிறது. இந்த '' உலமா '' பென்ஷன் பெறும் தகுதி உடையவர்கள் அனைவருக்கும் '' உலமா '' பென்ஷன், நிதிநிலைத் தட்டுப்பாடு காரணமாகக் கொடுக்க முடியவில்லை. இது குறித்து ஏற்கெனவே அரசு பரிசீலித்து இருக்கிறது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினருடைய கேள்வியையொட்டி மீண்டும் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1991 சனவரி 21]

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, " உலமா " பெருமக்களுக்கு 500 ரூபாய் கொடுப்பதற்கு வாய்ப்பில்லை என்பதுபோல அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். தற்போது இருக்கின்ற வாழ்க்கைச் சூழ்நிலையிலே 250 ரூபாய் என்பது மிகவும் குறைந்த ஒரு தொகை என்பதை மனதிலே இருத்தி, இனியாவது 500 ரூபாயாகக் கொடுக்கின்ற முயற்சியில் அரசு ஈடுபடுமா என்பதையும் பேஷ்மான்கள், மோதிமார்கள் என்று இருக்கக்கூடிய மதகுருமார்களுக்கு பணிப் பாதுகாப்பற்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. நினைத்தவாக்கில் அவர்களைப் பணி நீக்கம் செய்யக்கூடிய முறையிலே, இன்றைக்கு சங்கடங்கள் இருக்கின்ற காரணத்தால், அதை அரசு பரிசீலனை செய்து பேஷ்மான்களுக்கும், மோதிமார்களுக்கும் பிற துறைகளிலே பணி புரிகின்றவர்களுக்கு பணிப் பாதுகாப்பு இருப்பதுபோல் பணிப் பாதுகாப்பு கொடுக்க, அரசு இந்தச் சிக்கலைப் பரிசீலனை செய்து, உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கோவை இராமநாதன் அவர்கள் ஒரு ' உலமா ' வாகவே மாறிவிட்டதற்காக நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உலமாக்களுக்குக் கொடுக்கப்படுகின்ற பென்ஷனை 250 ரூபாயிலிருந்து 500 ஆக உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை மனுக்கள் வந்திருக்கின்றன. இது குறித்துப் பரிசீலிக்கப்பட்டது. தற்போதுள்ள நிதிநிலைமையில் முடியவில்லை என்று கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனாலும் அதை மீண்டும் வலியுறுத்துவதற்கான நடவடிக்கை அரசின் சார்பில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பேஷ்மான்கள், மோதிமார்களுக்குப் பணிப் பாதுகாப்பு இல்லை என்பது உண்மைதான். சட்டப்படியான பணிப் பாதுகாப்பு அவர்களுக்கு இப்போது இல்லை. உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் நடவடிக்கை எடுப்பதற்காக வக்ப் வாரியத்தோடு கலந்துகொண்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது வழங்கப்படுகின்ற 250 ரூபாயை 500 ரூபாயாக உயர்த்தக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லையென்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கொடுக்கின்ற தொகையை உயர்த்த முடியாவிட்டாலும் வழங்கப்படுகின்ற அந்தத் தொகையினைப் பெறுகின்றவர்களுடைய எண்ணிக்கையை, பயனடைகின்றவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவது பற்றி அரசு பரிசீலனை செய்யுமா ? ஏறக்குறைய 10 ஆயிரம் மனுக்கள் வக்ப் வாரியத்திலே தேங்கிக் கிடக்கின்றன. அரசு அலுவலகங்களிலேயும் ஏறக்குறைய 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மனுக்கள் தேங்கியிருப்பதாக அந்தத் துறை

சொல்கிறது. எனவே அந்த எண்ணிக்கையை உயர்த்தி, தற்போது கொடுக்கப்படுகின்ற அந்த 1,200 என்பதை, 250 ரூபாயாகவே வைத்து மூவாயிரம் பேருக்காவது வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்பட்டு நிதித்துறையிடம் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிப்பு.

* 9320—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், கடம்பூர் அருகே உச்சிப்பரம்பு என்ற இடத்திலும், சாயர்புரத்திலும் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா ?

(ஆ) அது எக்காலத்தைச் சார்ந்தவை ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மூன்றாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட முதுமக்கள் தாழிகள் கிடைத்திருக்கின்றன என்ற அந்தத் தகவலில் இருந்து பழங்காலத்து மக்கள் அந்தப் பகுதியிலே குடியிருந்திருக்க வேண்டுமென்கின்ற தகவல் நமக்குத் தெரிய வருகிறது. எனவே, அப்படி அவர்கள் இருந்தார்கள் என்பதற்கான, நகர அமைப்பு போன்ற ஏதேனும் சான்று கிடைத்துள்ளதா ? அவ்வாறாயின் அது எவ்வகை நாகரீகச் சிறப்புடையதாக இருந்தது ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிக விரிவான ஆராய்ச்சிக்குப் பின்னால் கண்டறியப்பட வேண்டிய ஒன்று, ஏனென்றால் பல ஆராய்ச்சிகள் பல்வேறு வகையில் வேறுபாடுகளை விளைவிக்கின்றன. இருந்தாலும்கூட, அந்த 3,000 ஆண்டுகள் என்பது வரலாற்றுக் கண்ணோட்டத்தில் மிகத் தொன்மையானது அல்ல ; அண்மைக் காலத்து, சங்க காலத்திற்குச் சற்று முற்பட்ட காலம் என்று சொல்லப்படக் கூடிய காலம்